# அபிவிருத்திக் கொள்கையில் பெண்கள்

**1 JULY 2013, V1**

| | | | |
|---|---|---|---|
| Version | V1 | Date | 01/07/2013 |

# உள்ளடக்கத்தின் அட்டவணை


அபிவிருத்திக் கொள்கையில் பெண்கள்

1.1 அறிமுகம்

1.2 கொள்கையின் நோக்கம்

1.3 நோக்கெல்லை

1.4 அபிவிருத்தியில் பெண்கள் மீதான கவனயீர்ப்பின் அவசியத்தை புரிந்துகொள்ளல்.

1.5 பாலின சமத்துவத்தில் உறுதிப்பாடு

1.6 திட்டத்தின் பன்னாட்டு பங்குதாரர்

1.7 திட்டத்தின் வடிவமைப்பும் கண்காணிப்பும்

1.8 பங்குதாரர் தேர்வு

1.9 வெளிவாரி: சட்டவாக்க மற்றும் ஒழுக்காற்று கட்டமைப்பு

# அபிவிருத்திக் கொள்கையில் பெண்கள்

## 1.1 அறிமுகம்

வேறுபட்ட சமூகச் சூழமைவுகளில், சமூகப் பண்புகள் மற்றும் வாய்ப்புகள் என்பன ஆண், பெண் என்னும் ரீதியில் வெவ்வேறான புரிதலையும் பட்டறிவையும் ஏற்படுத்துவதை Palmera கருத்தில் உள்வாங்கியுள்ளது.. இதனால்,எமது திட்டங்களிலும் அவற்றை செயற்படுத்தும் பங்குதாரர் மத்தியிலும் பாலின உணர்வுகளை மதிக்கும் நடைமுறைகளை ஆதரிப்பதில் நாம் பற்றுறுதி பூண்டுள்ளோம்.

## 1.2 கொள்கையின் நோக்கம்

பெண்களை வலுவூட்டுவதன் மூலமும் பாலின சமத்துவத்தை முன்னெடுப்பதன் மூலமும் அபிவிருத்தியின் விளைவை முன்னேற்றுவதும் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கையின் செயல்திறனுக்கு அத்தியாவசியமாக சமூகத்தின் சகல தரப்பினரின் முழுமையான,. சரிசமனான பங்களிப்பை ஊக்குவிப்பதுமாகும். மேலும், மனித உரிமைகளை சகலரும் பெற்றெடுப்பதற்கான அடிப்படையாக விளங்குவதற்குமாகும்.

## 1.3 நோக்கெல்லை

இக் கொள்கையானது Palmera வின் பன்னாட்டு திட்டங்கள் அனைத்துக்கும் பொருந்துவதாகும்.

## 1.4 அபிவிருத்தியில் பெண்கள் மீதான கவனயீர்ப்பின் அவசியத்தை புரிந்துகொள்ளல்

பெண்களுக்கெதிரான பாரபட்சம் மற்றும் வளங்கள், சேவைகள் அல்லது உற்பத்தி முயற்சிகள் ஆகியவற்றை நாடும் வாய்ப்பிலிருந்து பெண்களை ஒதுக்கிவைத்தல் என்பன ஏதுநிலையிலுள்ள ஒரு சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியையும் வாழ்க்கைத் தரத்தின் உயர்வையும் எதிர்மறையாக பாதிக்கும் என்பதை Palmera கருத்தில் எடுத்துள்ளது.

வறுமையின் சுமையை பெண்கள் சமமற்ற வீதத்தில் தாங்கிக்கொள்கின்றனர். குறிப்பாக, இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக குடும்ப வருமானத்தை ஈட்டிய ஆண்களை இழந்து இயங்கும் பெண்-தலைமைத்துவ குடும்பங்கள் பலவீனமானவை. பாலின ஏற்றத்தாழ்வுகள் வறுமையை தீவிரப்படுத்தவதுடன் அவை சுழற்சியாக நீடித்திருக்கவும் வறுமையே காரணமாக அமைகின்றது. உதாரணமாக[1]

- உலகில் அடிப்படைக் கல்வியறிவுத் திறனற்ற 80 கோடி (800மில்லியன்) மக்களில் மூன்றில் இரண்டு தொகையினர் பெண்களாவர்.
- .கர்ப்பகாலத்தில் ஏற்படும் சிக்கல்களினால் ஒவ்வொரு வருடமும் ஐந்து இலட்சம் பெண்கள் மரணிக்கின்றனர்---இதில் 99 விழுக்காடு வளர்முக நாடுகளில் வசிக்கும் பெண்கள் என்பதுடன் அனேகர் வளர்இளம் பருவத்தினர் ஆகும்.
- உலகெங்கும் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் தொகையில் ஏறத்தாழ 80 விழுக்காடு பெண்களும் அவர்களைச் சார்ந்த பிள்ளைகளும் ஆகும்.
- உலகளாவில் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் ஆகியோரில் மூன்றில் ஒருவர் உடல் வன்முறைக்கும் பாலியல் வன்முறைக்கும் உள்ளாகின்றனர்.

---

[1]Statistics taken from Gender equality in Australia's Aid Program: Why and How (Aus AID, 2007), UN Women Fact Sheet: Gender and the Millennium Development Goals (2010) www.unifem.org.au/LiteratureRetrieve.aspx?ID=43256, UN Committee on the Elimination of Discrimination against Women, Forty Sixth Session, Summary Record of the 939th meeting. Consideration of reports submitted by States parties under article 18 of the convention: Combined initial, second and third periodic reports of Papua New Guinea, 22 July, 2010.

- ஒவ்வொரு வருடமும் 900,000 வரையிலான மக்கள் இழிதொழில் வாணிக நோக்கில் சர்வதேச எல்லைகள் ஊடாக கடத்தப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் பெண்களும் பெண்பிள்ளைகளுமாவர்.

## 1.5 பாலின சமத்துவத்தில் உறுதிப்பாடு

பெண்கள் தொடர்பில் Palmera.வின் உறுதிப்பாடானது, உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையை பிரயோகித்து, உள்ளூர் பெண்களின் முழுமையான பங்கேற்பு, பொறுப்புக்கூறல் ஆகிய ஈடுபாடுகளுக்கு முக்கியத்துவமளிப்பதன் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளை உள்ளூர் உடைமையாக முன்னெடுப்பதை ஊக்குவிப்பதாகும். பெண்கள் மீதான வன்முறையை எதிர்கொள்ள பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பதும் பெண்களை வலுவூட்டுவதும் அவசியமானவை.. பாலின ஏற்றத்தாழ்வும் பாரபட்சமும் வன்முறையின் அறிகுறியாகவும் காரணியாகவும் உள்ளன.

அபிவிருத்திக்கான முதலீடுகள் அனைத்திலும் மத்தியில், பாலின சமத்துவம் அடிப்படையிலான முதலீடுகள் ஈட்டும் சில பெறுபேறுகள் அதி உயர்ந்த பெறுமதியானவை என்பதை Palmera கண்டுள்ளது..,குறைந்த பிரசவகால இறப்பு மற்றும் பிள்ளைகளின் மேம்பட்ட கல்வியறிவும் ஆரோக்கியமும் இவற்றில், அடங்குவதாகும். பெண்களின் ஆரோக்கியமும் சமூக-பொருளாதார படிநிலையும், ஒரு பிள்ளை பிழைத்து வாழும் வாய்ப்புடனும் விளைவுகளுடனும் நேரடித் தொடர்புபட்டதாகும். இத் தொடர்பு மகப்பேற்றுக்கு முன்னரே ஏற்பட்டுவிடுகின்றது. எனவே, பெண்களுக்கெதிரான பாரபட்சம் அடுத்த தலைமுறைக்கும் பாதகமானதாகும்.

## 1.6 திட்டத்தின் பன்னாட்டு பங்குதாரர்

பாலின பகுப்பாய்வு மற்றும் பாலின பெருவோட்டம் பற்றிய பங்குதாரரின் புரிந்துணர்வையும் அவற்றை முன்னெடுத்து நடைமுறைப்படுத்தும் ஆற்றலையும் அவ்வப்போது மதிப்பீடு செய்து கட்டியெழுப்புவதற்கு Palmera பொறுப்பேற்றுள்ளது..

## 1.7 திட்டத்தின் வடிவமைப்பும் கண்காணிப்பும்

Palmera வின் திட்ட முகாமைத்துவத்தில், தெரிவு, திட்டமிடல், வடிவமைப்பு, பங்கேற்பு, கண்காணிப்பு, மற்றும் பகுப்பாய்வு ஆகிய சகல கட்டங்களிலும் பாலின சமத்துவ அணுகுமுறைப் பிரயோகம் முக்கிய செயல் நோக்கமாக கொள்ளப்படும்

திட்டங்களின் நிதியுதவிக்கான மதிப்பீட்டில் பாலின கரிசனைகள் உள்வாங்கப்படும். திட்டத்தில் பெண்களை தீவிரமாக ஈடுபடுத்தல் இவற்றில் ஓர் அம்சமாக உள்ளடங்கும். இதற்கு வழிகோலும் வகையில் பெண்கள் பங்கேற்பதனால் ஏற்படக்கூடிய தடைகளையும், ஆபத்துக்களையும் இனங்காணுதல் மற்றும் அவற்றை கடந்தேறுவதற்கான மூலோபாயங்கள் முன்வைக்கப்படும்.. இதனுடன் இணைவாக, திட்டத்தை செயற்படுத்தும் கட்டங்களிலும் மீளாய்வின் போதும் பெண்களின் பங்கேற்பினால் விளையக்கூடிய பலன்கள், பாலின ரீதியில் பிரித்தெடுக்கப்பட்ட தரவுகள் மற்றும் அளவிடக்கூடிய பாலினம்-சார்பு விளைவுகளும் குறிகாட்டிகளும் உள்ளடக்கப்படும்.

## 1.8 பங்குதாரர் தேர்வு

திட்டங்களில் பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கும் எமது கொள்கையுடன் ஒத்துப்போகும் உறுதிப்பாட்டை கொண்டுள்ள பங்குதாரருடன் Palmera இணைந்து செயற்படும்.. மேலும், இதிலுள்ள பிரச்சினைகள பங்குதாரர் படிப்படியாக புரிந்துகொள்ளும் ஆற்றலையும் அதற்கேற்ப செயலாற்றும் திறனையும் கட்டியெழுப்புவதற்கு Palmera பொறுப்பேற்கும். .

## 1.9 வெளிவாரி: சட்டவாக்க மற்றும் ஒழுக்காற்று கட்டமைப்பு

- United Nations Convention on the Elimination of All Forms of Discriminations Against Women (CEDAW) (1979) to which Australia became a signatory in 1980 (http://www.un.org/womenwatch/daw/cedaw/cedaw.htm)

1980ல் அவுஸ்திரேலியா கைச்சாத்திட்ட பெண்களுக்கெதிரான அனைத்து பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம் (CEDAW) (1979).

- Beijing Platform for Action (1995) (http://www.un.org/womenwatch/daw/beijing/platform/plat1.htm)
- AusAID Gender Policy (2007): Gender Equality in Australia's Aid Program
  AusAiD பாலினக் கொள்கை (2007): அவுஸ்திரேலியாவின் உதவித் திட்டத்தில் பாலின சமத்துவம்.